பக்கங்கள்: ஆறு Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி26 வெள்ளிக்கிழமை(11-08-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 259

# வலி. வடக்கு, மேற்கு பகுதிகளில் படையினர் நேற்று கடும் ஷெல்வீச்சு

## ஐவர் காயம்! பலர் இடப்பெயர்வு!!

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 11

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்குப் பகுதிகளில் படையினர் நேற்று மேற்கொண்ட ஷெல் தாக்குதல்களின்போது ஐவர் காயமடைந்தனர். வீடுகள், கட்டடங்கள் சேதம் அடைந்தன. நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்தன.

அளவெட்டிப் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று தொட்டிலடி, பிரான்பற்று, சங்கானை, நிச்சாமம், பண்டத்தரிப்பு, வடலியடைப்பு பகுதிகளை நோக்கி கண்மூடித் தனமாக ஷெல் தாக்குதலை நடத்தினர்.

தமது ஆக்கிரமிப்புப் பிரதேச எல்லைக் கிராமங்களில் வாழும் மக்களை அச்சுறுத்தும் விதத்திலேயே இந்த ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

ஏற்கனவே மக்கள் பலர் இடம் பெயர்ந்திருந்ததால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன.

மக்களை பீதியடையச் செய்து இடம்பெயர வைக்கும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டுக்கு மீண்டும் ஈழத் தமிழ் அகதிகள்

### நேற்று 11 பேர் சென்றனர்

சென்னை, ஒக. 11

நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழ்நாட்டுக்கு மீண்டும் இலங்கை அகதிகள் செல்ல ஆரம்பித்துள்ளனர்.

நேற்று படகு ஒன்றில் பதினொரு இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்ததாக இந்திய வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கும் இடையில் மீண்டும் சண்டை மூண்டபின்னர் இந்தியா வந்துள்ள முதலாவது தமிழ் அகதிகள் இவர்கள் என்றும்—

இந்த அகதிகளை இந்திய கடற்படையினர் காவல்துறையினர் மூலம் மண்டபம் அகதிமுகாமுக்கு அனுப்பிவைத்தனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-க]

## தியான இல்லம் மீதும் ஷெல்

### அருட் சகோதரி காயம்

யாழ்ப்பாணம், ஒக. 11

நேற்று இடம்பெற்ற ஷெல் வீச்சுக்களில் காயமடைந்த ஐவரில் பண்டத்தரிப்பு தியான இல்லத்தைச் சேர்ந்த அருட் சகோதரி டிசேல்ஸ் (வயது 70) என்பவரும் ஒருவர் ஆவார்.

தியான இல்லம் மீதான ஷெல் தாக்குதலில் இவருடன் மேலும் இருவர் காயம் அடைந்தனர். தியான இல்லத்தில் தஞ்சமடைந்திருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த சூசைப்பிள்ளை அல்போன்ஸில் [வயது 70]—

பத்திமா கோவிலடியைச் சேர்ந்த பத்திநாதர் நேசம்மா [வயது 58] ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

காயமடைந்த மற்றும் இருவரில் ஒருவர் சுப்பிரமணியம் பாலசிங்கம் [வயது 50]—

பிரான்பற்றில் உள்ள வீட்டின் பொருள்களை எடுத்துவரச் சென்றபோது வீதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் இவர் காயம் அடைந்தார்.

காயமடைந்த மற்றையவர் கோபால் வாமதேவன் [வயது 34]

வடலியடைப்பில் வீட்டு முற்றத்தில் விழுந்த ஷெல்லினால் இவர் காயம் அடைந்தார்.

பண்டத்தரிப்பில் தியான இல்லம் மீது விழுந்த ஷெல்வி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்னும் 2 மாதங்களில் புலிகளை ஒழித்துக் கட்டிவிட முடியுமாம்

### அனுருத்த ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு ஒக. 11

விடுதலைப் புலிகளை இன்னும்இருமாதங்களில் ஒழித்துக் கட்டுவதாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று முன் தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கை மிகவும் குறைவான அளவிலேயே செயற்படுத்தப்பட்டதாகவும்—

முழுமையாக அது செயற்பட்டிருந்தால் புலிகளை ஒழித்துக்கட்டியிருக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த இரண்டு மாதங்களில் 700க்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அனுருத்த ரத்வத்த கூறினார். [இ-3]

## ஈ. பி. டி. பி. பகிஷ்கரிப்பை கைவிட்டது

கொழும்பு, ஒக. 11

கடந்த இரு வாரங்களாக நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வந்த ஈ. பி. டி. பி. கட்சி எம். பிக்கள் இன்று முதல் மீண்டும் நாடாளுமன்றம் செல்ல முடிவு செய்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதி மக்களின் பிரச்சினைகள் பற்றி அரசாங்கத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக தாம் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வந்ததாகவும் —

இந்தப் பிரச்சினைகளுக்கு துரித தீர்வு காணப்படும் என ஜனாதிபதி தமக்கு உறுதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர் கப்பல் சேவை உடனடியாக இல்லை

### அடுத்த மாத நடுப்பகுதியில்

யாழ்ப்பாணம், ஒக. 11

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக்குழுவின் ஏற்பாட்டில் நடத்தப்படவிருக்கும் நோயாளர் கப்பல் சேவை அடுத்த மாதம் நடுப்பகுதியில் இருந்தே ஆரம்பிக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது.

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் கப்பல் சேவையை நடத்த ''ஹபரண'' கப்பலை அந்த அமைப்பு வாடகைக்கு பெற்றிருந்தது.

இக்கப்பலில் சில திருத்த வேலைகள் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட வேண்டியுள்ளதாகவும் —

அதன்பின்பே நோயாளர் சேவையை அது ஆரம்பிக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

'சீடான்ஸர்' கப்பல் காங்கேசன்துறையில் கண்ணியில் சிக்கி மூழ்கியதை அடுத்து நோயாளர் கப்பல் சேவை இடை நிறுத்தப்பட்டது தெரிந்ததே. [இ-3]

## மூதூரில் 24 கிராமங்கள் மீது பொருளாதாரத் தடை

யாழ்ப்பாணம், ஒக. 11

திருகோணமலையில் மூதூர் பிரதேசத்தில் 24 தமிழ்க்கிராமங்கள் மீது ஸ்ரீலங்கா படையினர் முற்று முழுதான போக்குவரத்து, பொருளாதாரத்தடையை விதித்துள்ளனர்.

இதனால் இக் கிராமமக்கள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

மூதூர் கோட்டத்தில் உள்ள வெருகல், ஈச்சிலம்பத்தை, பாவடிச்சேனை, பூநகர், வெருகல் — முகத்துவாரம், முத்துச்சேனை, வாழைத்தோட்டம், இலங்கைத்துறை முகத்துவாரம், கட்டைபறிச்சான், சேனையூர், பள்ளிக்குடியிருப்பு. சம்பூர். கூனித்தீவு, பாட்டாளிபுரம், வீரமாநகர், இலக்கந்தை, வேச்சாளம், மல்லிகைத்தீவு, மணற்சேனை, சாயபுரம், நல் ..ர், கங்குவேலி, இளிவெட்டி, கறுக்காய் முனை ஆகிய 24 கிராமங்கள் மீது இத்தடைகள் விதிக்கப்பட்டுள்ளன. [இ-3]

## படையினர் சூட்டுக்கு மீனவர் காயம்

யாழ்ப்பாணம், ஒக, 11

பொன்னாலைக் கடற் பிராந்தியத்தில் கடற் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களை நோக்கி இராணுவம் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதில் மீனவர் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் மூளாய் தெற்கைச் சேர்ந்த வி. விஸ்வலிங்கம் [வயது 50] என்பவரே காயமடைந்தவராவார். [இ-15]

## முல்லைத்தீவில் மீனவர் மீது கடற்படையினர் தாக்குதல்

முல்லைத்தீவு கடற்பகுதியில் மீனவர்கள் மீது கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் பொக்கணைப் பகுதி கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது படகு ஒன்று சேதமடைந்தது.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தவராசா [ 22 வயது ] என்ற இளைஞன் இத்தாக்குதலில் காயமடைந்தார். (இ-3)

## வடக்கே உணவு அனுப்ப அரசாங்கம் புதிய முயற்சி?

யாழ்ப்பாணத்துக்கு உரிய உணவுப் பொருள்களை அரசாங்க அதிபரின் பொறுப்பில் எடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகச் சொல்லப்படுகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பில் உணவுக் கப்பல்களை அனுப்புவதில் தடங்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்தே அரசு இந்த மாற்று நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக அறியப்படுகிறது.

அரசின் உத்தேச ஏற்பாட்டின் கீழ் உணவுப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு கப்பல் ஒன்று தயாராக இருப்பதாகவும் அதனை யாழ்ப்பாணம் கொண்டு செல்ல அரச அதிபருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டதாக அரச தரப்பில் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாக ஈ. பி. டி. யின் தலைவர் டக்ளஸ் தேவானந்த பி. பி. ஸிக்குத் தெரிவித்தார். (அ-3)

## இன்று

மாலை 2-30 மணிக்கு நாவலர் கலாச்சார மண்டபத்தில்

"நல்லைக் குமரன் மலர் 1995"
வெளியீட்டு வைபவம்
நடைபெறும்.

வருகை தந்து மலரை பெற்று எமது பணிகள் சிறக்க ஆதரவு தருவீர்

சைவசமய விவகார குழு,
யாழ். மாநகராட்சி மன்றம்.

(சி/2040)

## விசேட கலந்துரையாடல்

இன்று [11 - 08 - 95] வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேசத்தின் சகல வணிக நிலைய ஊழியர்களுக்கும் வருவாய்த் துறையினரால் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் ஓர் கலந்துரையாடல் இருப்பதனால் சகல ஊழியர்களும் தவறாது சமுகம் கொடுக்கவேண்டும். இதற்கமைய உரிமையாளர்கள் ஊழியர்கள் கலந்துரையாடலில் பங்குபற்றும் முகமாக இன்றைய தினம் பிற்பகல் 3.00 மணியுடன் ஊழியர்களுக்கு லீவு வழங்கி அனைத்து ஊழியர்களையும் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

யாழ். மாவட்ட
வணிகர் கழகங்களின் இணையம்

[சி/2041]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி சிவகாமி கந்தையா
(இளைப்பாறிய அதிபர்)

பண்புடனும், அன்புடனும்
பதியினிலே உலவி வந்தாய்
பரிதவிக்க எமைவிட்டு
இறைவனடி சென்றாயோ
கனிவான உன் வதனம்
காண்போமோ எம் வாழ்வில்
காலமெல்லாம் கண்ணீருடன்
கலங்குகிறோம் கதறுகின்றோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவின் துயரால் வாடும்;
செந்தில்நாதன், சகோதரிகள்,
பிள்ளைகள்

154, கொழும்பு வீதி,
கண்டி.

[37978]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



### அமரர் கந்தையா துரையையா

மலர்வு:
17 - 12 - 1915

உதிர்வு:
12 — 07 — 1995

இறந்தனன் எனநினைக்க
இரும்பினால் நெஞ்சம் வேண்டும்!
வருந்துவர் வருத்தம் நீக்க
மறைந்தவன் வரத்தான் வேண்டும்
அருந்தமிழ் ஆற்றல் கொண்டே
ஆயிரம் துயரம் தீர்ப்பார்
இறந்த எம் தலைவர் துரையையா தந்த
இத்துயர் தீர்ப்பா ரல்லர்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
ஊரெழு.

(37975)

உ

## இந்து சமயப் பேரவை, யாழ்ப்பாணம்

சமீபத்தில் இராணுவ நடவடிக்கைகளால் ஏராளமான மக்கள் இடம்பெயர்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் இந்துக் கோயில்களும், நிறுவனங்களும் ஆற்ற வேண்டிய பணிகளும் பங்களிப்பும் பற்றிய கலந்துரையாடல்கள் பின்வரும் அட்டவணையின்படி நடைபெறும்.


சகல இந்துக் கோவில்களின் தர்மகர்த்தாக்கள் பரிபாலன சபைகளின் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்களையும், இந்து சமய நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், பேரவைச் செயற்குழு உறுப்பினர்களையும், இந்து சமய, சமூக அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்களையும் தவறாது பங்குபற்றுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

| பிரிவு | இடம் | திகதி |
|---|---|---|
| வடமராட்சி | அல்வாய் (மாலுசந்தி) சின்னத்தம்பி வித்தியாசாலை | 11 - 08 - 1995 (இன்று) மு. ப. 10-00 மணி |
| வலிகாமம் | நல்லை ஆதீனம் நல்லூர் | 12 - 08 - 1995 சனி மு. ப. 10-00 மணி |
| தென்மராட்சி | சாவகச்சேரி டிறிபேர்க் லூரி | 13 - 08 - 1995 ஞாயிறு பி. ப. 3-00 மணி |

ஆ. மகாலிங்கம்
பதில் தலைவர்

சி. சக்திகிரீவன்
கௌரவ செயலாளர்

(சி-2048)




### இரு மாதங்களுக்கு ஒருமுறை
## 10 பெறுமதி மிக்க பரிசில்கள்
### உங்களுக்கு காத்திருக்கின்றன.

- ✶ 1 ஆம் பரிசு சுவர் மணிக்கூடு
- ✶ 2 ஆம் பரிசு எவர் சில்வர் பொருள்கள்
- ✶ 3 ஆம் பரிசு T சேட்

மற்றும் ரூபா 200/- க்கு மேற்படாத 7 ஆறுதல் பரிசில்கள்

1. குடை
2. தொப்பி / சாப்பாட்டுப் பெட்டி
3. அல்பம் (Album)
4. பாடசாலைப் பை
5. பிளாஸ்டிக் வாளி
6. எவர் சில்வர் பேணிகள்
7. கை மணிக்கூடு

இவற்றை வென்றிட நீங்கள் செய்ய வேண்டியது இதுவே

உங்களுக்கு அருகில் உள்ள எமது போத்தல் சேகரிப்பு நிலையத்தில் பின்வரும் போத்தல்களில் யாதேனும் நான்கைக் [4] கொடுத்து அதற்குரிய பணம் 20/-ஐ பெறுவதுடன் ஒரு பரிசுச் சீட்டையும் இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்

### போட்டிக்கு ஏற்கப்படும் போத்தல்கள்

1. ஜாம (Jam)
2. கோடியல் (Cordial) (வெள்ளை/கறுப்பு)
3. வீவா/ஹார்லிக்ஸ் (450g) பிளாஸ்டிக் மூடியுடன்
4. பியர் (Beer)

இன்றே உங்கள் போத்தல்களை எம்மிடம் விற்று
உங்கள் அதிர்ஷ்டத்தைப் பரீட்சித்துப் பாருங்கள்

முதலாவது சீட்டிழுப்பு ஒக்டோபர் 16ஆம் திகதி 1995
திங்கட்கிழமை நடைபெறும்

பரிசு பெறுவோரின் விவரங்கள் பத்திரிகை வாயிலாகவும்,
தபால் மூலமாகவும் அறிவிக்கப்படும்.

பின்வரும் இடங்களில் போத்தல்களை ஒப்படைககலாம்

1. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 2 சபாரீஸ் - சுண்டுக்குளி 3. பேப்பர் சொப் இருபாலை 4. சுபாஸ் பேக்கவுஸ் - நெல்லியடி 5. மாருதி - வல்வெட்டித்துறை 6. வாசுகி ஸ்ரோர்ஸ் - சுண்டுக்குளி 7. நியூ வசந்தா - சின்னக்கடை 8. தாஸ் ஸ்ரோர்ஸ் - கலாசாலை வீதி. திருநெல்வேலி 9. விநாயகர் - கல்வியங்காடு 10. ஜெயசக்தி பார்மஸி - மருதனார்மடம் 11. யாழ்ற்றன் ஸ்ரோர்ஸ் - கொக்குவில் 12. S. R. மகேந்திரன் ஸ்ரோர்ஸ் - கோண்டாவில் 13. அம்பிகை வர்த்தக நிலையம் - திருநெல்வேலி 14. அன்புக் களஞ்சியம் - ஆஸ்பத்திரி வீதி 15. வேல் களஞ்சியம் - தட்டாதெரு 16. செல்வசந்நிதி ஸ்ரோர்ஸ் - வல்வெட்டித்துறை 17. கிருஷ்ணா வர்த்தக நிலையம் - திருநெல்வேலி 18. நிக்சோ ரேடேஸ் - ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் 19. ராஜேஸ்வரி - சாவகச்சேரி 20. யூனியன் பேக் கவுஸ் - சாவகச்சேரி.

# ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ்
# (தனி) லிமிட்டட்

14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

[சி-2039]

★ நவாலி தேவாலயச் சம்பவம்:

# அரசாங்கம் விவரம் கேட்பது உடைந்த ஓடுகள் பற்றியே!

## யாழ். ஆயர் சொல்கிறார்

தேவாலயச் சூழலில் நடந்த சகல நிகழ்வுகள் பற்றியும் அரசுக்கு தெரிவித்துள்ளேன். இறந்த மற்றும் காயமடைந்த பொதுமக்களின் விவரங்களையும் வழங்கியுள்ளேன். ஆனால் அவை பற்றி அரசு எதுவித கவலையும் தெரிவிக்காது, தேவாலயத்தில் எத்தனை ஓடுகள் உடைந்தன என்ற விவரத்தையே அனுப்புமாறு கேட்டுள்ளது. உயிர்களைப் பற்றி அக்கறைப்படாத அரசு ஓடுகளைப் பற்றியே அக்கறை காட்டுகிறது.

— இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் அதி வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை.

நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தவேளை நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் அஞ்சலிநிகழ்வில் பேசுகையிலேயே இப்படிச் சொன்னார்.

தேவாலயமுன்றிலில் நேற்று முன்தினம் மாலை இந்த அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது.

ஆயர் அதி வண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அங்கு மேலும் கூறியதாவது:

நாட்டில் அசம்பாவிதங்கள் ஏற்படும் போது மக்கள் ஆண்டவனை நம்பி ஆலயங்களில் சரணடைகின்றனர். அவ்வாறான ஆலயங்களின் மீதே அரசு குண்டுகளை வீசுமாயின் மக்கள் ஆண்டவன் மீதே வெறுப்புக் கொள்ளும் நிலை உருவாக்கப்படுகிறது — என்றார்.

உயிரிழந்த மக்களின் ஆன்ம சாந்திக்கான இரங்கல் திருப்பலி ஆராதனையை அருட்திரு. ஹென்றி ஜெயநேசன் அடிகள் நடத்தினார். அருட்திரு ஜெயசீலன் அடிகள் அருளுரை வழங்கினார்.

தொடர்ந்து நவாலி பங்குத் தந்தை அருட்திரு. பொனிபஸ் அடிகள் தலைமையில் ஆன்மீக அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

தென்னிந்திய திருச்சபையின் சார்பில் வண. பிதா ஆனல்ட், வண. பிதா தர்ம குலசிங்கம், நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் குருக்கள் பிரம்மஸ்ரீ நிர்மலசர்மா ஆகியோரும் அங்கு உரையாற்றினர்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர் உறவினர்கள் மற்றும் நவாலி பகுதி மக்கள் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர்.

[ஐ-20]

## கிராமிய வங்கி இடமாற்றம்

சண்டிலிப்பாய், ஓக. 11

சங்கானை பிரதான வீதியில் இயங்கி வந்த பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவு சங்க கிராமிய வங்கி, கடந்த வாரம் தொடக்கம் மானிப்பாய் வைத்தியசாலைக்கு சமீபமாகவுள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை தற்போது சங்கானையில் இயங்கி வரும் சங்க தலைமை அலுவலகத்தையும் வேறு பாதுகாப்பான இடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக சங்கத் தலைவர் தெரிவித்தார்.

(எ-135)

## காஷ்மீர், கொழும்பு செல்ல இந்திய விமானிகள் மறுப்பு!

### போர் விமானம் பாதுகாப்புத் தர வேண்டுமாம்

கொழும்புக்கும் மற்றும் காஷ்மீர், பஞ்சாப் மாநிலங்களுக்கும் விமானங்களை ஓட்டிச் செல்ல இந்திய விமானிகள் மறுப்புத் தெரிவித்துள்ளதாக இந்தியப் பத்திரிகைகள் கடந்த ஞாயிறன்று செய்தி வெளியிட்டுள்ளன.

இப் பகுதிகளுக்கான சேவைகளை மேற்கொள்ள தமக்கு இந்திய விமானப்படையின் போர் விமானங்கள் பாதுகாப்புத்தர வேண்டும் என விமானிகள் வலியுறுத்தியதாக ''இந்து'' பத்திரிகை தெரிவித்தது.

கொழும்பு போன்ற யுத்த பிரதேசத்துக்கு சேவையில் ஈடுபடக்கூடாது என்றும் —

காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களின் மேலாகப் பறக்கும் இந்தியன் ''ஏயார் லைன்'' விமானங்களை தீவிரவாதிகள் தாக்கக்கூடும் என பாதுகாப்பு அமைச்சு கூறியிருப்பதாகவும் தொழிற்சங்கமான இந்திய வர்த்தக விமானிகள் சங்கம் தனது அங்கத்தவர்களுக்குத் தெரிவித்துள்ளது.

விமானிகள் இவ்வாறு அச்சுறுத்தல் விடுத்துள்ள போதிலும்—

விமான சேவையை சீராக நடத்த தேவை ஏற்படின் விமானிகள் தொழிற்சங்கத்துக்கு வெளியே இருந்து விமானிகள் சேவைக்கு அமர்த்தப்படுவர் என்று இந்தியன் ''எயார் லைன்ஸ்'' நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை—

கொழும்பு ஓர் யுத்தப் பிரதேசம் அல்ல என்றும், தமிழ் தீவிரவாதிகள் தங்கியுள்ள யாழ்ப்பாணப் பிரதேசத்துக்கு அருகில் செல்லாமல் கொழும்புக்குச் செல்ல இலங்கை அரசு வழியை மாற்றி அமைத்துள்ளது என்றும் இந்தியன் ''எயார் லைன்ஸ்'' நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் எஸ். டி. டியோ தெரிவித்துள்ளார்.

(ஐ-எ)

## பேராதனை பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் கைது

யாழ்ப்பாணம், ஓக. 11

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொறியியல்பீட தமிழ் மாணவர்கள் இருவர் கண்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொறியியல் பீட நான்காம் வருட மாணவர்களான வல்வெட்டித்துறை நெடியகாட்டைச் சேர்ந்த நந்தகுமார் மற்றும் ரவி ஆகிய இருவருமே இரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரியவருகிறது.

ஒரே அறையில் தங்கியிருந்த இவர்களில் நந்தகுமார் கடந்த 4ஆம் திகதியும், ரவி கடந்த 6ஆம் திகதியும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னர் கொழும்பில் இவர்கள் தங்கி நின்ற வீட்டில் தகவல் பெறப்பட்டதாக அறியவந்தது.

(எ-ஐ-க)

## பெரும் தாக்குதல் நடத்த கிளிநொச்சிப் பகுதியில் 2 ஆயிரம் புலி வீரர்களாம்

கொழும்பு, ஓக.11

இராணுவ முகாம் ஒன்றின் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக மாங்குளம், முல்லைத்தீவு, மல்லாவி, கிளிநொச்சி உட்பட பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுமார் இரண்டாயிரம் விடுதலைப்புலி வீரர்கள் கிளிநொச்சியில் திரண்டிருப்பதாக வவுனியாவில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இத்தகவல் கொழும்புக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் —

எந்தத் தாக்குதலையும் எதிர்கொள்ளக்கூடியதாக ஆனையிறவு படை முகாம் உஷார்படுத்தப்பட்டிருப்பதாகவும் —

சிரேஷ்ட படை அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக அப் பத்திரிகை தெரிவித்தது.

## சுன்னாகம் சந்தை செயலிழந்ததால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 11

கடந்த மாதம் நடைபெற்ற ''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் சுன்னாகம் சந்தை சேதமடைந்தும் செயலிழந்தும் வெறிச் சோடிக் கிடக்கிறது. இதனால் வலிகாமம் கிழக்கு, வலிகாமம் வடக்கு வலிகாமம் மேற்கு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் சந்தையில் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்த இந்த விவசாயிகள் தற்போது அதைச் செய்யமுடியாமல் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

சுன்னாகம் சந்தை செயல்படாத காரணத்தால் விவசாயிகள் பொருள்களை அறுவடை செய்யாமலே விட்டுள்ளனர் எனவும், அறுவடை செய்யப்பட்ட பல பொருள்கள் பழுதடைந்துள்ளன எனவும், எஞ்சிய பொருள்கள் பழுதடைந்து அழியும் அபாயம் உள்ளது எனவும் அறிய வருகின்றது.

கருணைக்கிழங்கு, இராசவள்ளி, மரவள்ளி, வற்றாளை போன்ற பயிர்களின் அறுவடை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இளம் விவசாயி ஒருவர் தான் சுமார் 15 பரப்பில் மரவள்ளி, இராசவள்ளி, கருணைக்கிழங்கு போன்ற பயிர்வகைகளை உற்பத்தி செய்துள்ளதாகவும், சுன்னாகம் சந்தை நடைபெறாமல் போனதை அடுத்து இப்பயிர்களை அறுவடை செய்யாமல் விடலாம் போலத் தோன்றுவதாகவும் மிகுந்த கவலையுடன் தெரிவித்தார்.

(ஓ-க-15)

## "நெருப்பு நிலவுகள்" வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஓக. 11

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பிரிவினர் உருவாக்கிய —

விடுதலைப் புலிகள் மகளிர் படையணியின் வெளியீடான ''நெருப்பு நிலவுகள்'' பாடல் ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா இன்று மாலை 5 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலை பண்பாட்டுக் கழக மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி. மகேஸ் விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. கி. இளம்பரிதி, கடற்புலிகள் மகளிர் பிரிவு சிறப்புத் தளபதி செல்வி கல்யாணி ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவைத் தொடக்கி வைப்பர்.

மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி. நிசானா பாடல் ஒலிப்பதிவு நாடாவை வெளியிட நிதர்சனப்பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அதனைப் பெற்றுக்கொள்வார்.

கவிஞர் புதுவை இரத்தினதுரை சிறப்புரையாற்றுவார். திருமதி கோகிலா மகேந்திரன், பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், திருமதி சிதம்பரநாதன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை வழங்குவர்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் கலைஞர்களைக் கௌரவிப்பார்.

[ஐ]

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்

### மன உரம் தருவாய்!

சித்தா குலந் தீர்ப்பாய் சிங்கார வேலவனே முருகா
கந்தா வென்றே நாம் கரங்குவித்தே கதறுகின்றோம்
சிந்தா கண்ணீரை ஏன் சிந்த வைக்கின்றாய் சிவன்
மைந்தா குமரா நல்லூரானே நலமருள்வாய்!

இரத்தப் பலியாகி இளநெஞ்சங்கள் வேகின்றனவே
கந்தா
கரத்தைக் குவித்தே பணிந்தோம் விரைந்தோடி
வந்தே - நல்
வரத்தைத் தந்தே எதிரியின் வலிமையை அழித்திட மன
உரத்தைத் தருவாய் முருகா உமையாள் மைந்தா
குகனே!

— இராசையா ஸ்ரீதரன்.

### துயர் கடிதேக எழுவாய்!

நாங்கள் கொடுத்துநிலை நாலுலகும் தெரிந்த விலை
ஏங்கும் இதயங்கள் இறும்பூது எய்த வென
தாங்கும் கைவேலவனே தயவானதத்துவனே
பாங்காய் முடிந்திடவே பக்குவமாய் வந்திடையா!

அண்டம் அனைத்தும் விண்டெழுந்த வேலவனே
கொண்ட குறிக்கோளை குவலயத்தில் நாம் பெறவே
வண்டுதும் தார்குழலி வள்ளி மணவாளா
கண்ட துயர் கடிதேகக் கானமயில் மீதெழுவாய்!

— மதிவதனி வேலாயுதம்

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

டிப்பிறிசர் [Deepfreezer] விற்பனைக்கு உண்டு. 27 (157A), ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [8629]

நல்ல நிலையிலுள்ள ஏஸியா சைக்கிள் (ஆண்கள்) விற்பனைக்கு உண்டு. கனகசிங்கம் இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (37964)

குறைந்த விலையில் தேவையான அளவு இரண்டாம் தரத் தேங்காய்ப் பிண்ணாக்கு விற்பனைக்குண்டு. தொடர்பு: K. வீரசிங்கம். முருகன் எண்ணெய் ஆலை, மருதடி மேற்கு, சாவகச்சேரி. (37966)

E G K 600 ஹொண்டா 500 வாற்ஸ்) ஜெனரேட்டர் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: சேசவன் மாஸ்ரர், கோயிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி. (37960)

### வெற்றிக்கனி — 3

வெற்றிக்கனி — பகுதி - 3 வெளிவந்து விற்பனையாகிறது. ஆக்கம்: பொன் சக்திவேல். விலை ரூபா 60/- விற்பனை பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு எமது ஸ்தாபனம் நல்லூர் சிவன் கோயில் அருகில் திறக்கப்பட்டுள்ளது. (சி-2037)

### வெளிவந்துவிட்டது

G.C.E (A/L) 95 வர்த்தக மாணவர்களுக்கு உரிய நடைமுறை விடயங்கள் வெளிவந்துவிட்டன. ஆசிரியர்கள் திரு க. தேவராஜா, திரு.இ. இரட்ணம். வெலிங்டன் சந்திக்கு அருகில் அறிவகம் புத்தகசாலையிலும், C. C. A. யிலும் பெற்றுக் கொள்ளலாம். (சி-2038)

### அக்கரைச்சீமையில்

மலிவு விலையில் அக்கரைச் சீமை போய் வா, 250 நாடகங்கள் எழுதிய அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாவலை வாசியுங்கள். 100 பக்கங்கள் விலை 25/- பூபாலசிங்கம், நல்லூர் ஸ்ரீகாந் புத்தகசாலைகள். [37933]

### புதிய பாடத் திட்டம்

1997க்கான க. பொ. த. உயர்தரம் வணிகத்துறைக்கான முழுப்பாடத்திட்டம், பொருளியல், கணக்கியல், வர்த்தகம், புள்ளிவிவரவியல் ஆகிய பாடங்களை உள்ளடக்கியது. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். [சி-1999]

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

### மணமகன் தேவை

வயது 38, அரசாங்க உத்தியோகம் (நிரந்தரம்), மகம் 1ஆம் பாதம், செவ்வாய் 12 உள்ள மணமகளுக்கு 45 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தொடர்பு: இல. 821, மே/பா உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (37962)

### மணப்பெண்கள் தேவை

குற்றமற்ற 34, 35 வயது டாக்டருக்கும், 39 வயது B. Sc. க்கும், 40வயது என்ஜினியருக்கும், குற்றமுள்ள 35 வயது கடை முதலாளிக்கும், 29 வயது எக்கவுண்டனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (37967)

### தவறிவிட்டது

க. ஏகாம்பிகை ஆகிய எனது அடையாள அட்டை, பணம், காலசங்கிலி என்பன 07-08-95 அன்று நியூ-மார்க்கெற்றிற்குள் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ராஜ் மெரீனா ரெக்ஸைரல், கஸ்தூரியார் வீதி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (37965)

### வகுப்புகள்

Short Hand and Typing வகுப்புக்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் சிறப்பாக நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு School of Business Administration, No: 16 3 rd Cross Street Jaffna. (சி-2023)

### PHYSICS

சிறு குழுக்களாகவோ தனியாகவோ பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ளவிருக்கும் மாணவரால் Physics கற்பிக்கப்படும். தொடர்பு: 122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி தெற்கு. யாழ்ப்பாணம். (37904)

### இலகு திருமண சேவை

29 வயது சதயம், செவ்வாயற்ற கிரகபாவம் 83 பட்டதாரி ஆசிரியைக்கு பொருத்தமான மணமகன் உள்ளூர்/ வெளியூர் தேவை, பொருத்தமான மணமக்கள் தேர்விற்கு உடன் நாடுங்கள் விமலா யாழ். நாச்சிமார் கோவிலடி, (37929)

## டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக 11

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடத்தப்படும் கல்விப் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாட நெறிக்கான எழுத்துப்பரீட்சையின் பகுதி I II க்கான பரீட்சை அடுத்த மாத இறுதியில் நடைபெறும் என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். [ஐ-3]

## மாதாந்த உதவிப்பண கொடுப்பனவு

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கும், காச நோய், தொழுநோய், புற்று நோய் ஆகியவற்றிக்கான உதவிப்பணம் பெறுபவர்களுக்குமான ஜூன் மாதக் கொடுப்பனவுகள், இப் பிரிவு தபால் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. [எ-135]

## ஆனமடு கிராமங்களுக்கு துப்பாக்கி

உடப்பு, ஓக. 11

ஆனமடு தொகுதியில் உள்ள பல கிராம மக்களுக்கு தீவிரவாதிகளுக்கு எதிராக துப்பாக்கி, வெடி மருந்துகள் ஆகியன வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது (ஓ)

## யா/இந்து மகளிர் கல்லூரி

## பரீட்சை ஆண்டு - 9

மேற்படி பரீட்சை விண்ணப்பப் படிவத்தில் 14 — 08 — 95 அன்று ஆண்டு - 9 மாணவிகள் வந்து ஒப்பமிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

திருமதி ச. ஜெயராசா,
அதிபர்.

[சி-2035]

## தமிழீழ ஆடிவேல் விழா

இன்றைய தினம் முதல் மூன்று தினங்கள் பக்தி பூர்வமாக யாழ். நகரில் ஊர்வலமாகக் கொண்டாடப்படும் இவ்வருட சிறப்பம்சமாக

நவவீரர்

பவனி வருதல் நடைபெறும். இதன் வெள்ளோட்ட விழா நேற்றைய தினம் நடைபெற்றது

இதை உருவாக்கிய சிற்பக் கலைஞர்

விஸ்வப் பிரம்மஸ்ரீ திரு. தம்பிப்பிள்ளை ஸ்ரீதரன் ஆசாரியர்

"நவவீர சிற்ப பானு"

என்னும் சிறப்புப் பட்டம் வழங்கியும்

தங்கப் பதக்கம்

அணிவித்தும் வாழ்த்தி கௌரவிக்கப்பட்டார்.

— தேவஸ்தானம்.

[37959]

நெஞ்சத்தை விட்டகலாத
விண்ணக வாழ்வின்

## 41 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



மண்ணில்: 02 — 05 — 1959

விண்ணில்: 02 — 07 — 1995

02 - 07 1995இல் ஜேர்மனியில் காலமான

திருமதி

## புஸ்பமலர் (புசி) பிறான்சீஸ் (ராசன்)

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்
என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகிறேன்"
(லூக் 23 — 43)

அன்பின் திருவுருவே,பாசத்தின் இருப்பிடமே,
குடும்பத்தின் குலவிளக்கே தன்னையே தீபமாக்கிய
அன்புத் தெய்வமே! எங்களைவிட்டுப் பிரிந்து
நாற்பத்தொரு நாள் சென்றாலும் உங்கள் அன்புருவம்
எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது!

உயிர்ப்பும் உயிருமாகிய ஆண்டவரே!
உம்மில் விசுவாசம் கொண்டு இவ்வுலகில்
வாழ்ந்து இறந்த உமது அடியாள் புஸ்பமலரின்
ஆன்மாவுக்கு முடிவில்லா பேரின்ப வாழ்வைக்
கொடுத்தருளும் ஆமென்.

இவரின் பிரிவால் துயருறும்;

அன்புக் கணவன், பிள்ளைகள்,
தந்தை, சகோதர, சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில். [37961]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 25 — 03 — 1900

மறைவு: 23 — 07 — 1994

## திருமதி முருகேசு முத்தம்மா

(வட்டுக்கோட்டை)

(Wife of Late K. Murugesu, Financial Assistant Malaya)

பாசமுடன் அரவணைத்து அமுது ஊட்டிய என்
அன்பு அம்மாவே!
மருமக்கள் எம்மை மகிழ்வுடன் வரவேற்று
உபசரித்த அன்பு மாமியே!
பேரர்கள் எம்மை பேருவகை கொள்ளவைத்த
எங்கள் அன்புப் பேர்த்தியே!
பூட்டர்கள் எமக்கு புன்னகையுடன், பொன்நகையும்
அணிந்த அன்புப் பூட்டியே!

தங்கள் தள்ளாத வயதினிலும் தங்கமான நல்லுரைகள் கூறி எம்மை வழிநடத்திய நீங்கள் பிரிந்து ஓராண்டு சென்று விட்டாலும், ஒவ்வொரு நாளும் உங்கள் நினைவுடனேயே வாழ்கின்றோம்.

அன்பு மகன், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"குமரவேல்"
சங்கரத்தை வீதி,
வட்டுக்கோட்டை. [37955]

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.


## தப்ப முடியாது!

கொழும்பிலும் மட்டக்களப்பிலும் குண்டு வெடிப்புகள் நடைபெற்றதன் விளைவாக பங்குச் சந்தை பெரும் வீழ்ச்சி கண்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு – கிழக்கில் அரசாங்கம் தமிழர்களுக்கு எதிராக நடத்தி வரும் போரினால் இந்த நாட்டின் பொருண்மியம் நலிந்து, மெலிந்து போவது புதிய விடயமல்ல.

போர் இரண்டு வகைகளில் பொருளாதாரத்தைப் பாதிக்கிறது. போருக்காகச் செலவிடப்படும் பல லட்சம் கோடி ரூபா நிதிவளம், விளைவு இல்லாத விவசாயமாக வீணடிக்கப்படுகிறது.

இரண்டாவதாக, திறந்த பொருண்மியம் மூலம் வெளிநாட்டு மூலதனத்தைக் கவர்ந்து நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுப்பது என்ற கொள்கை செயலளவில் எதிர்மறையாகவே மாறியுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் போரினையும் அதன் விளைவுகளையும் கூர்ந்து அவதானித்த வண்ணமே உள்ளனர். அதனால் ஸ்ரீலங்காவில் முதலீடு செய்யும் விடயத்தில் ஓடும் புளியம்பழமும் போல, பெரிதாக ஒட்டிக்கொள்ளாமலேயே செயற்படுகின்றனர்.

போர் நாட்டின் பொருண்மியத்தைப் பாழடிக்கிறது என்பதனை ஒரு வருடத்திற்கு முன்னர் எதிரணி அரசியல்வாதியாக இருந்த போது சந்திரிகாவும் துல்லியமாக அறிந்து வைத்திருந்தார். போருக்கு செலவிடப்படும் நிதிவளத்தை அபிவிருத்திக்கு ஆற்றுப்படுத்தப் போவதாகத் தேர்தல் காலத்தில் சூளுரைத்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு போரை நிறுத்தி சமாதானத்தைக் காணப்போவதாகவும் கர்ச்சித்தார்.

ஆனால் இப்போது... அதிகாரக் கதிரையில் ஏறியதும், தமிழர்கள் மீது ஒரு தீர்வைத் திணிக்க வேண்டும் என்ற நயவஞ்சகப் புத்தி வந்ததும் போரினூடாக சமாதானத்தை நிலைநாட்டப் போவதாகக் கொக்கரிக்கிறார்.

அதனால் போர் பொருண்மியத்தைப் பாதிக்கிறது என்பதனை அவர் வசதியாக மறந்திருக்கலாம். அரசாங்கத்தின் நிதிவளத்தை விரயம் செய்யத் துணிந்தது மட்டுமன்றி, பாதுகாப்பு நிதி, பாதுகாப்பு வரி, வெண்தாமரை இயக்கம் என்று சிங்கள மக்களின் நிதிவளங்களையும் மறைமுகமாகச் சுரண்ட முற்பட்டிருக்கிறார்.

பிந்திய மதிப்பீடுகளின் படி ஈழப் போர் மூன்று தொடங்கிய பின்னர், போருக்காக அரசாங்கம் நாளொன்றுக்கு சுமார் ஐம்பது கோடி ரூபாவைச் செலவிடுகிறதாம்!

நாட்டில் ஆறு சதவீத பொருண்மிய வளர்ச்சி ஏற்பட்டிருப்பதாக மத்திய வங்கி அறிக்கை காட்டினாலும், நாட்டின் பொருண்மியம் செத்துவிட்டதாக முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல் சரியாக வர்ணித்துள்ளார்.

இந்தச் செத்துப் போன பொருண்மியத்தைப் புதைப்பதற்காகத்தான் சந்திரிகா போரைத் தொடங்கியுள்ளார். அதன் விளைவை அவர் விரைவில் அனுபவிப்பார்... தப்பமுடியாது...!

# புலிகளை ஒதுக்கி விட்டு தீர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்துவது சாத்தியமானதே அல்ல

## தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, ஓக. 8

“இனநெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கம் முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை வடக்கு - கிழக்கில் நடைமுறைப்படுத்துவதனால், விடுதலைப் புலிகளை விலக்கி வைத்துவிட்டு அவ்வாறு செய்வது நடைமுறைச் சாத்தியமானதேயல்ல”

அமைச்சரும், இ.தொ.கா. தலைவருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஞாயிறு வீரகேசரிக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசு முன்வைத்துள்ள யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கமும், புலிகளும் பங்காளிகளாக வேண்டும்.

அரசாங்கத்தின் யோசனைகள் குறித்து இ.தொ.காவின் நிலைப்பாட்டை தெட்டத்தெளிவாக அரசாங்கத்திடம் குறிப்பாக ஜனாதிபதியிடம் விளக்கிக் கூறியுள்ளோம்.

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கடந்த 40 வருடங்களாக திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாக குடியேற்றப்பட்ட மக்களின் நன்மைக்காக அந்த மாகாணத்தின் எல்லைகளை மீள வரைவதாயின் —

150 வருடங்களுக்கும் அதிகமான காலம் மலையகத்தையே தாயகமாகக்கொண்டு வாழும் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்கள் வசிக்கும் பகுதிகளும் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டு தனியான அதிகாரப்பரவலாக்கல் அலகு உருவாக்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவே இருக்கிறோம்.

தீர்வு யோசனைகளை நடைமுறைப்படுத்த வேண்டுமானால் அதற்கான சூழ்நிலையை உருவாக்கக் கூடியவர்களுடன் தானே பேச வேண்டும்.

அந்த வகையில் நோக்குகையில், அரசியல் தீர்வுயோசனைகளை முன்வைத்தவர்களே அவை தொடர்பாக மீண்டும் பேசவருமாறு விடுதலைப் புலிகளுக்கு ‘‘பச்சைக்கொடி’’யை காட்ட வேண்டும். அதன் பிறகு தான் புலிகள் பேச்சுக்கு வருவார்களா இல்லையா என்று தெரியும்.

தீர்வு யோசனைகள் குறித்து ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தியபோது, நடைமுறைச்சாத்தியமான நிலைப்பாட்டையே நாம் வலியுறுத்தினோம்.

பல தசாப்தங்களாக துன்ப துயரங்களையும் பெரும் இழப்புக்களையும் சந்தித்த போதிலும் தங்களது மன உறுதிப்பாட்டை இழக்காமல் இருக்கும் வடக்கு -கிழக்கு மக்களுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இச்சமயத்தில் இதையே கூறி வைக்க விரும்புகிறேன்— என்றார். [ஓ-3]

## புலிகளின் குரல் வானொலியில்

### 11 – 08 – 1995

#### வெள்ளி இரவு

★ 8-02— கலைமஞ்சரி— அறிமுகம்— அறிமுகமாவது கலாரத்தினம் மத்திய மகாவித்தியாலய தமிழ் மன்றம் வெளியிட்ட ‘கலைத்தாரகை’ மலர், சிறுகதை— போராளி றோயல் எழுதிய ‘‘கண்ணீர்ப் பூக்கள்’’ கவிதை— வெ. சந்திரன் எழுதிய ‘‘விடுதலையின் நேரமிது’’

★ 8-25 — கணப்பொழுது —போராளி பகலன் எழுதிய ‘‘லெப்ரினன்ட் கேணல் கில்மன்’’

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — அரசியல் அரங்கம்— வே. பாலகுமாரன் எழுதிய ‘இதய பூமியில் செருகப்பட்ட ஈட்டி’

★ 8-50— ஏர்முனை— நிகழ்ச்சியில் ‘‘பயிர்ச்செய்கையில் நீரின் முகாமை’’ கேள்வி —பதில்

### 12 – 08 – 1995

#### சனி காலை

★ 7-02—மாவீர வணக்கம்

★ 7-15 — நீங்கள் கேட்டவை

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7-45 — நீங்கள்கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

### தமிழீழ வானொலியில்

#### வெள்ளி மாலை

★ 5-01—சிந்தனைச்சிதறல்

★ 5-02 — எழுச்சிகீதம்

★ 5-10 — புதியவை

★ 5-15 — கணநேரக்காவியங்கள்

★ 5-30 — மண்ணின் குரல்

★ 5-40 — நேயர் கடிதங்கள்

★ 5-45 — நாடகம்

★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்

★ 6-02—வெற்றிச்சுவடுகள்

★ 6-10 — செய்திகள்

★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்

★ 6-20 — என் தெரிவு

## இந்து சமயப் பேரவையினர் நடத்தும் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 11

இராணுவ நடவடிக்கை காரணமாக ஏராளமான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ள தற்போதைய சூழ்நிலையில் இந்துக் கோயில்களும், இந்து நிறுவனங்களும், இந்து அபிமானிகளும் ஆற்ற வேண்டிய பணிகள் - பங்களிப்புக்கள் பற்றி ஆராய்வதற்கான கலந்துரையாடல்களை இந்து சமயப் பேரவை வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி ஆகிய பிரிவுகளில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

வடமராட்சிப் பிரிவுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத் (மாலுசந்தி) திலும் —

வலிகாமம் பிரிவுக்கான கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நல்லை ஆதீனத்திலும் —

தென்மராட்சிப் பிரிவுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் மூன்று மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியிலும் நடைபெற உள்ளன.

இக் கலந்துரையாடல்களில் இந்துக் கோவில்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் தர்மகர்த்தாக்கள், இந்துசமய பேரவை நிர்வாக உறுப்பினர்கள், இந்து சமய சமூக அபிவிருத்தி நிதியப் பணிப்பாளர்கள் ஆகியோரை தவறாது கலந்து கொள்ளுமாறு இந்து சமய பேரவையினர் கேட்டுள்ளனர்.

தமிழீழ புனர் வாழ்வு நிறுவனப் பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடல்களில் கலந்து கொள்ள உள்ளனர். (க–152)

## டிப்ளோமா வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஓக. 11

தேசிய கல்வி நிறுவக கல்வி டிப்ளோமாப் பயிற்சி நெறியில் பயிலும் — கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி நிலைய — 1995 ஆம் ஆண்டின் பகுதி I பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஆசிரிய மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் நாளை காலை 9 மணிக்கு மேற்படி நிலையத்தில் நடைபெறும் என சிரேஷ்ட விரிவுரையாளர் அறிவித்துள்ளார். (உ)

## நல்லூர் சூழலில் இன்று

கொழும்புத்துறை ஓக. 11

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் பதினோராம் நாள் திருவிழாவான இன்று ஆலயச் சூழலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள்:-

★ நாவலர் மணி மண்டப முன்றிலில் மாலை 6 மணி முதல் 7 மணிவரை கன்யா- சிவானந்தம் பாட்டு 7 மணி முதல் 8-30 மணிவரை திரு. எஸ். கணபதிப்பிள்ளை பாட்டு

★ நல்லை ஆதீனகலா மண்டபத்தில்—

பி. ப 3 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கத்தின் சமயப்பேருரை- கந்தரனுபூதி

★ மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில்—

மாலை 5–30 மணிக்கு பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மாவின் ‘‘விஷ்ணு பாகவதம்’’ தொடர் இசைப் பேருரையில் ‘‘கஜேந்திர மோட்சம்’’ [எ-30-111]

## ரி. பி. சுபசிங்க காலமானார்

கொழும்பு, ஓக. 11

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவரான திரு. ரி. பி சுபசிங்க (வயது 81) நேற்று காலமானார்.

1960 ஆம் ஆண்டு பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தில் இவர் சபாநாயகராக விளங்கினார்.

ஸ்ரீ ல சு. கட்சியின் பொதுச் செயலாளர், கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பீட அங்கத்தவர் ஆகிய பதவிகளையும் சுபசிங்கா வகித்திருந்தார். [இ-ஐ]

## வேரும் விழுதுகளும் கண்காட்சி ஆரம்பம்

## சகலரும் பார்த்துப் பயன்பெற வேண்டியது

பாடசாலை மாணவர் முதல் பல்கலைக்கழக ஆசிரியர்கள் வரை பார்த்துப் பயன் அடையவேண்டிய கல்வியியல் கண்காட்சி ஒன்று குடாநாட்டில் நடைபெறுகிறது.

செஞ்சோலையினரால் நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடியில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி, இதுவரை குடாநாட்டில் நடைபெற்ற கண்காட்சிகளை விட முற்றிலும் புதிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது.

மனிதன் எப்படித் தோன்றினான், அவன் இன்றைய முன்னேற்றப் படிகளில் நிற்பதற்கு எவ்வகை மூலோபாயங்களையும், போராட்டங்களையும் நடத்தித் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு ஏனைய உயிரினங்களை விட மேம்பட்ட நிலைக்கு வந்தான் என்ற வேர்களையும்—

உலகினதும் அதன் உயிரினங்களினதும் பரிணாம வளர்ச்சியை, குறிப்பாக மனிதனின் சமூக வாழ்க்கையியலில், ஏற்பட்ட மாற்றங்களையும், வரலாற்றையும் ஈழத் தமிழரின் இன்றைய எழுச்சி மிகு பதிவுகளையும், காட்டும் விழுதுகளையும் —

ஒரே கண்காட்சியில் பார்க்கக்கூடிய அரியசந்தர்ப்பத்தை இந்தக் கண்காட்சி வழங்குகிறது. மனித வாழ்க்கையோடும், சமூக வளர்ச்சியுடனும் சம்பந்தப்பட்ட பல்துறை அம்சங்கள் விசாலமாகவும் ஆழமாகவும் இங்கே தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளன. விஞ்ஞான பூர்வமான அணுகுமுறையும், அமைப்பும் இக் கண்காட்சியின் சிறப்பம்சங்கள் எனலாம்.

யாழ்ப்பாணத்தில் இப்படி ஒரு கண்காட்சியை, இன்றைய சூழலில் அமைக்க முடியுமா என்று வியக்கவைக்கும் முறையில் ‘‘வேரும் விழுதுகளும்’’ பிரமாதமாக இருக்கிறது.

இரண்டு மணித்தியாலங்களை கண்காட்சியில் கழித்து விட்டு வெளியேவரும் போது எங்கள் பூர்வீகத்தையும், புதிய சூழலையும் தரிசித்த மன உணர்வு எங்களை அறியாமலே பற்றிக் கொள்கிறது.

ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு ஆசிரியரும், தனது பூர்வீகத்தைப் பற்றி, தனது சூழலைப் பற்றிய தேடல் அக்கறை உள்ள ஒவ்வொருவரும் பார்க்க வேண்டிய முற்றிலும் புதுமையும், பொருளும் பொதிந்து விளங்கும் கண்காட்சி இது.

செஞ்சோலையினரதும் அவர்களைச் சார்ந்தவர்களினதும், அவர்களுக்கு உதவிய துறைசார்ந்த அன்பர்களதும், ஓவிய, சிற்பக் கலைஞர்களினதும் ஆற்றலினதும் திறமையினதும், உழைப்பினதும், ஆளுமையினதும் வடிவமாக இக்கண்காட்சி மிளிர்கிறது எனலாம்.

‘‘வேரும் விழுதுகளும்’’ கண்காட்சி நேற்று ஆரம்பமாகி விட்டது. இளைய சந்ததியினருக்கு பழமை — புதுமைகள் பற்றிய புதிய செய்திகளைக் கூறும் ஒரு தேடலாகவே தாம் இந்த முயற்சியில் ஈடுபட்டதாக செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி தெரிவித்தார்.

அந்தத் தேடல் முயற்சி வெற்றி அளித்திருக்கிறது என்று சொல்லுமளவுக்கு கண்காட்சி எல்லோருக்கும் பயன் அளிப்பதாக உள்ளது.

கண்காட்சியை தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் இன்பன் நேற்றுக் காலை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (அ)

ஆரம்பமாகிவிட்டது!

# வேரும் விழுதுகளும்

கல்வியியல் கண்காட்சி - 95

இடம்: நுணாவில் கண்ணகை அம்மன் கோவிலடி
பார்வையாளர்களுக்காக 15 — 08 — 1995 இல்
திறந்து விடப்படும்.

- செஞ்சோலை மகளிர் வித்தியாலயம்.

[37973]

---

## 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

### அமரர் சைமன் தங்கராஜா

[தங்கமயில்]

(யாழ். வர்த்தக பாதுகாப்பு சேவை அதிகாரி)

இவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08 - 08 - 95 அன்று சுதுமலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

எமது பாசமிகு தந்தையின் ஈமக்கிரியையில் கலந்து கொண்டவர்க்கும், அந்தியேட்டிக் கிரியைகளில் பங்கு கொண்டவர்களுக்கும், உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் தபால்மூலம் அனுதாபச்செய்தியை அனுப்பியவர்க்கும், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.


இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
மகன் கிரிதரன்

பதிவாளர் வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

(37983]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மெல்லிசைக் கலைஞர்

### அமரர் A.R. கிருஷ்ணமூர்த்தி

(யாழ். மாநகர சபை ஊழியர்)

மலர்வு: 20 — 05 — 1940
உதிர்வு: 23 — 07 — 1994

திதி இன்று 11 – 08 – 1995

ஆண்டு ஒன்று சென்றாலும் அன்பு முகம் மறக்க முடியவில்லை. அழியாத நினைவலைகள் ஆட்டிப் படைக்கின்றதே! அன்போடு எம்மை அரவணைத்த பாசமிகு தெய்வமே! என்றென்றும் எம்மோடு இருந்து உகந்த வழி காட்டுங்கள். ஓராண்டு அல்ல — ஒரு யுகம் சென்றாலும் — நித்தம் உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவின் துயரால் வாடும்;
மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

19/1 A, B.A. தம்பி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை.

(37982]

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 11 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## நரசிம்மராவ் தமிழக விஜயம் ரத்து!

சென்னை, ஓக. 11

தமிழகத்துக்கு இன்று மேற்கொள்ளவிருந்த விஜயத்தை இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் ரத்துச் செய்துள்ளார்.

ஆளும் காங்கிரஸ் கட்சிக்கும், அ.தி.மு.கவுக்கும் இடையில் கூட்டணி அமைக்கும் நோக்குடன் இந்தியப் பிரதமரின் விஜயம் அமையவிருந்ததாகவும்—

பி.வி. நரசிம்மராவும், ஜெயலலிதாவும் ஒரு வைபவத்தில் பங்குபற்ற ஏற்பாடாகியிருந்ததாகவும்— தெரிவிக்கப்பட்டது. [இ-3]

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 11

வலி,கிழக்கு உதைபந்தாட்டச் சங்கம் நடத்தி வந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின். அரை இறுதி ஆட்டம் இன்று பிற்பகல் 3-30 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில், சென். அன்ரனிஸ் கழகமும்— றோயல் கழகமும் பங்குபற்றுகின்றன. [உ]

## வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 11

"ஓ" பிரிவு வலைப்பந்தாட்ட நடுவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை நாளை காலை 8-00 மணி முதல் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறும் என யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கம் அறிவித்திருக்கிறது.

எழுத்து மூலப் பரீட்சைக்கு சமுகமளித்தவர்களுக்கான வாய்மூலப் பரீட்சை மற்றும் உடற்தகுதிகாண் நிலை, மதியஸ்தம் வகித்தல் ஆகியவற்றுக்கான செயல்முறைப் பரீட்சை என்பனவே நாளை நடைபெறவுள்ளன. (உ)

## விபத்தில் சிக்கியவர் மரணம்

நெல்லியடி பிரதான வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற மினிபஸ் — லான்ட்மாஸ்டர் விபத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த இருவரில் ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

இச்சம்பவத்தில் லான்ட்மாஸ்டரில் வந்தவரான புலோலி தெற்கு, அல்வாய் தெருமூடி மடம் பகுதியைச் சேர்ந்த அதிர்ஷ்டம் ஜெயக்குமார் [வயது 21] என்பவரே உயிரிழந்தவராவார். இவர் திருமணமாகி 10 ஆம் நாள் விபத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த மற்றவர் லான்ட்மாஸ்டரை ஓட்டிச் சென்றவரான, அல்வாய் தெருமூடி மடத்தைச் சேர்ந்த கந்தவனம் நடராசா [வயது 38]. இருட்டுவேளை வெளிச்சமின்றி இருவாகனங்களும் சென்றபோதே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [இ-13-15]

---

### வலி.வடக்கு---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குடன் படையினர் நடத்திய ஷெல் வீச்சினால் மக்கள் குடியிருப்புகள் பெரும் அளவில் சேதம் அடைந்தன. [இ-3-28-135-13-15]

---

### ஈ.பி.டி.பி.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அளித்துள்ளதாகவும் ஈ.பி.டி.பியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை ஈ.பி.டி.பி. வரவேற்கிறது என்றும் அவர் கூறினார். (இ-ஐ)

### தியான---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னால் தியான இல்லம் சேதமடைந்துள்ளது.

பகல் உணவு அருந்திக் கொண்டிருந்த சமயம் தியான இல்லம் மீது ஷெல் விழுந்தது.

காயமடைந்தவர்களில் நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அருட் சகோதரி மானிப்பாயில் சிகிச்சை பெற்றார் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-13-15]

---

## காணவில்லை

சுதுமலை வடக்கு, சாயி பாபா கோவில்
பிரதம குரு ஆத்தாள்

அவர்களை 8 - 8 - 1995 அதிகாலையில் இருந்து காணவில்லை அவர் எங்கிருந்தாலும் உடன் வரும்படி கோவில் அடியார்கள் வேண்டுகிறார்கள்.

தகவல்:
—பாபா கோவில் அடியார்கள் சார்பில்
க. ரவிச்சந்திரன்

(37977)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசமணி துரைரத்தினம்

[பேபி அன்ரி]

அராலி வடக்கைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி துரைரத்தினம் நேற்று மாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரைரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், ஜேசுதாசன் [முன்னாள் கெஸ்ரெட்னர் (Gestetner) ஊழியர்], தேவதாசன் (முன்னாள் சாருக் கம்பனி ஊழியர்), விஜயதாசன் [முன்னாள் வைத்திலிங்கம் கம்பனி ஊழியர்] ஆகியோரின் அன்புத் தாயாரும், தவபுத்திரி [கோட்டக் கல்வி அலுவலகம் - கோப்பாய்], ஷாந்திலா, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமியும், எமலின் [எமா], டிலானி, நிஷானி, றொஷானி' காலஞ்சென்ற தர்ஷன் மற்றும் விஜயரூபன், ஜெயரூபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இரத்தினம்மா நாகலிங்கம், சுகிர்தம் சான்டர்ஸ் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாளை சனிக்கிழமை பகல், 10 மணிக்கு கோப்பாய் கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
T. ஜேசுதாசன்
(மகன்)

"பாக்கிய வாசா,
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(37984]

---

### திருமதி மனோன்மணியம்மாள் நவரத்தினம்

புலோலியைப் பிறப்பிடமாகவும் மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணியம்மாள் நவரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியை) கொழும்பு 09 - 08 - 1995 அன்று காலமானார்.

இவர் அமரர் நவரத்தினத்தின்(ஓய்வு பெற்ற கணக்காளர் - இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், அமரர் சதாசிவம் சோமஸ்கந்தன் (இளைப்பாறிய கல்விப்பணிப்பாளர், சிலாபம்) அவர்களின் அன்புத் தங்கையும், திரு. வேலாயுதம் (இளைப்பாறிய அதிபர்], அமரர் கந்தசாமி (இளைப்பாறிய ஆசிரியர்). ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 10 - 08 - 1995இல் மூளாயில் நடைபெற்றன.

தகவல்:
திரு. வ. வேலாயுதம்
(மைத்துனர்)

மூளாய்,
சுழிபுரம்.

[37976]

---

### ஆறுமுகம் சுப்பிரமணியம் (சோதி)

வேலணைச் கிழக்கை சேர்ந்த ஆறுமுகம் சுப்பிரமணியம் 07- 08- 95 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் ஆறுமுகம் - காலஞ்சென்ற சின்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இளையதம்பி - செல்லம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற புஸ்பமலரின் அன்புக் கணவரும், ஜனகன், ஜெயகதன், சோபனா, ஜெயதாஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரெத்தினம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்) சந்திரசேகரம் (ஆசிரியர்) சொக்கலிங்கம், கருணாகரன் (தபாலகம்- வேலணை) செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் துக்க நிகழ்வுகள் இன்று (11-08-95) எமது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. கருணாகரன்
(சுந்தரமூர்த்தி)
சகோதரன்

முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலை முன்பாக,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

(37980]